**அக்டோபர் - 1**

**"என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்கும்மட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன்." - சங் 39.1.**

நன்மை செய்வதற்கோ அல்லது தீமைசெய்வதற்கோ, தனக்குள்ள செல்வாக்குள்ள சக்தியில் நாக்கு சரீரத்தின் மற்ற எல்லா அவயத்தையும் மிஞ்சுகிறது என்று கூறுவதை, ஒருவேளை அனுபவமுள்ள எல்லோரும் முற்றிலுமாக ஒப்புக்கொள்ளுவார்கள். அதிகமான பெரும்பான்மையோருக்கு, நாவைத்தவிர மற்ற எந்த அவயத்தையும் அடக்குவது எளிதாக இருக்கிறது என்று கூட அனுபவம் படிப்பிக்கிறது. நாவு அவ்வளவு திறமையுள்ள ஒரு சேவகனாக இருப்பதால் ஒவ்வொரு முன்னேறும் ஆசையும் தீவிர உணர்ச்சியும் விழுந்துபோன சுபாவத்தின் உகந்த மனநிலையும் தீமை செய்வதற்காக அதை ஒரு சேவகனாகவோ அல்லது வழியாகவோ உபயோகப்படுத்த நாடுகிறது. ஆகையால் அது தனக்கும் மற்றவர்களுக்கும் தடையாக இராதபடிக்கு ஆனால், அதற்கு மாறாக நெருக்கமான வழியில் ஒரு உதவியாய் இருப்பதற்காக இந்தத் தன்னுடைய சரீரத்தின் அவயத்தை ஆளவும் அதை கிறிஸ்துவில் ஏற்பட்டிருக்கிற புது மனதிற்கு உட்படுத்தவும், கிறிஸ்தவனுக்கு மிகுதியான ஜாக்கிரதையும், ஞானமும், கவனமும் வேண்டியிருக்கிறது. **- Z ’97, 156 (R 2156)**

இரகசியத்தை வைத்திருக்கும் குணத்தன்மை இல்லாதவர்கள் தேவனுக்கும், தங்களுக்கும், மற்றவர்களுக்கும் எதிராக அநியாயமான காரியங்களைச் சொல்லித் தங்களுடைய நாவினால் பாவம் செய்ய ஆளாகிறார்கள். இரகசியத்தை வைத்திருக்கும் குணத்தன்மை பெரிய அளவில் உடையவர்களும் கூட முழுவதுமாக இந்த அநியாயத்திற்கு குற்றமில்லாதவர்கள் அல்ல. இரு வகுப்பாருக்கும் முக்கியமாக முந்தியவர்களுக்கும் சரியான காரியத்தை சொல்வதற்காகவும் அநியாயமான காரியத்தை செய்யாமலிருப்பதற்காகவும் தங்களுடைய குணங்களிலும், எண்ணங்களிலும், உபதேசங்களிலும், வார்த்தைகளிலும், செயல்களிலும், சூழ்நிலைகளிலும் தங்கள் மேல் கிரியை நடப்பிக்கிற செல்வாக்குகளிலும் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருப்பது அவசியமாயிருக்கிறது. தேவனுடைய ஜனங்கள் எல்லாச் சமயங்களிலும் தங்களுடைய நாவுகளை அடக்கியாள நாடவேண்டும். விசேஷமாக துன்மார்க்கரின் முன்னிலையில் இருக்கும்பொழுது இதைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். துன்மார்க்கர் எல்லா சரித்திரமும் நிரூபிக்கிற பிரகாரமாக, சுயநலமான நோக்கத்தோடும், தீயநோக்கத்தோடும் தேவனுடைய ஜனங்களுடைய வார்த்தைகளை குதர்க்கமாக அர்த்தம் செய்வார்கள். **- P ’36 110.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 10:7; 12:3,4; 15:1-3; 37:30; 141:3; 34:13; யோபு 38:2; 16:5; 27:3; நீதி 10:11,13,19-21,31,32; 11:12-14; 12:14-23; 13:2,3; 14:3; 15:1,2,4,7,14,23,26,28; 16:21-24; 17:7,27,28; 18:6,7,13; 29:11,20; பிர 5:3,7; ஆமோ 5:13; சக 8:16; மத் 12:37; லூக் 6:45; எபே 4:22,25,29; கொலோ 4:6; யாக் 1:19,26; 3:2,13; வெளி 14:5.**

**கோபுர வாசிப்பு : Z ’11, 126 (R 4804).**

**வினாக்கள் : இந்த வசனம் சம்பந்தமாக இந்தவார அனுபவம் என்ன? எந்த சந்தர்ப்பங்களில்? பலாபலன் என்ன?**